5, அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக்குழு,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் மற்றும் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு,

பேராசிரியர் க, பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1991–92 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6, அறிவிப்புகள்.

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள். 1992–93—குறித்து (ஆ.செ.),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1992–93 ஆம் ஆண்டில் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது,

In pursuance of Clause 2 of Article 206 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, Bishma Naraian Singh, Governor of Tamil Nadu hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants in advance for the demands for the financial year, 1992–93.

7. முன்பண மானியக் கோரிக்கைகள், 1992–93, வாக்கெடுப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24-3-1992 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை, 1992–93 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்காக மொத்தமாக ரூபாய் 2,487 கோடியே 19 ஆயிரத்திற்கு மேற்படாத தொகை அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டுமென்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.